தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, பங்குனி 5, திருவள்ளுவர் ஆண்டு-2049

2018 மார்ச் 19, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.”

ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்று எண்ணி, எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதியுடன் இருந்தால், அவர்கள் எண்ணியபடியே அச்செயலில் மிகப் பெரிய வெற்றி அடைவார்கள்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்புகள். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ந. தனசேகரன் அவர்கள் 26–10–2017 அன்றும், திரு. என். இராஜாங்கம் அவர்கள் 22–1–2018 அன்றும், திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள் 3–2–2018 அன்றும், திரு. கா. கந்தசாமி அவர்கள் 11–2–2018 அன்றும் மற்றும் திரு. ப. ஆண்டிவேல் அவர்கள் 14–2–2018 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ந. தனசேகரன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. என். இராஜாங்கம் அவர்கள் 1962–1967, 1967–1971 மற்றும் 1971–1976 ஆகிய ஆண்டுகளில் குறிஞ்சிப்பாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த

[2018 மார்ச் 19

முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1974 முதல் 1976 வரை அமைச்சராகவும், 1984–1990 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள் 2006–2011 மற்றும் 2011–2016 ஆகிய ஆண்டுகளில் கிள்ளியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. கா. கந்தசாமி அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதியிலிருந்தும் மற்றும் 2001–2006 ஆம் ஆண்டுகளில் நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1996–1997 ஆம் ஆண்டுகளில் இராசிபுரம் தொகுதி மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. ப. ஆண்டிவேல் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் வேடசந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப் பகுதி, மலையேற்றம் சென்றவர்கள் காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். 11–3–2018 அன்று தேனி மாவட்டம், போடி வட்டம், குரங்கணி மலைப்